ALC.



ஐ.டி.எண். 67/2022 12.02.2025

தொ.த.சாட்சி 1 மகாதேவன் குறுக்கு விசாரணை

நான் தொழிலாளர் அலுவலகர் முன்பு தாக்கல் செய்த மனுவின் விவரம் மற்றும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் விவரம் அனைத்தும் நான் கூறிய சங்கதிகளின் அடிப்படையில்தான் தயாரிக்கப்பட் டன என்றால் சரிதான். மனுவின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையின் விவரங்களும் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 01.07.1998 அன்று வேலைக்கு சேர்ந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான் ஆனால் அதைக்குறித்த ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.எப். ஆவணங்களின் படி என்னுடைய பிறந்த தேதி13.02.1964 என்றால் சரிதான்.என்னுடைய பி.எப். பதிவேடு நகல் நி.த.சா.ஆ.1 என்னுடைய பிறந்த தேதியின் அடிப்படையில் 12.02.2022 தேதியன்று எனக்கு 58 வயது பூர்த்தியடைந்தது என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 2ல் குறைந்த பட்ச சம்பள சட்டத்தின்படியும் அரசானை எண்.60 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் படியும் ஒரு நாளைக்கு அடிப்படை கூலியாக ரூ.160/- வழங்க வேண்டுமென்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அடிப்படை சம்பளம் பற்றி மட்டும்தான் கூறியுள்ளேன். அகவிலைப்படி பற்றி எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். நான்கோவிட்க்குமுன்பு வரை பணிபுரிந்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு வரை எனக்கு சம்பள ரசீதும் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் நவம்பர் மாதத்திற்கு உண்டான சம்பள ரசீது எனக்கு வழங்கப்பட்டுள்ளதான் அது நி.த.சா.ஆ.2ஆகும். 2019 நவம்பர் மாதத்திற்கு பின்னிட்டடு டி.எ. உயர்வதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

அந்த ரசீதியில் அடிப்படை சம்பளம் அகவிலைப்படி அனைத்தும் காணப்படுகிறது என்றால் சரிதான். அதேபோன்று நான் எத்தனை நாட்கள்வேலை செய்தேன் என்றும் இ.எஸ்.ஐ. பிடித்தம் சம்மந்தமான விவரங்களும் காணப்படுகின்றன என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலம் பக்கம் 3 பத்தில் 8ல் நான் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவை என்றால் சரிதான். 12(3)ஒப்பந்தங்கள் யார், யார்க்கிடையே ஏற்படுத்தப்படும் என்றால் எனக்கு தெரியாது அந்த ஒப்பந்தங்கள் தொழிற்சங்கத்திற்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஏற்படுத்தப்படும் என்றால் எனக்கு தெரியாது. நான் கூறியுள்ள 12(3) செட்டில்மெண்ட் எந்த கால கட்டத்திற்கு உண்டானது என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் எந்த தொழிற்சங்கத்திலும் உறுப்பினர் கிடையாது. 12(3) ஒப்பந்தப்படி 2020ம் ஆண்டு ஒரு தொழிலாளிக்கு அடிப்படை சம்பளம் எவ்வளவு என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. கோவிட்க்கு பின்னிட்டு தொழிற்சாலை இயங்கியது 10 நபர்கள் அந்த சமயத்தில் பணிபுரிந்தார்கள். கோவிட் காலம் 3 வருடங்கள் வரையிருந்தது. 2020க்கு முன்னர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 40 நபர்களுக்கு மேல் பணிபுரிந்தார்கள். கோவிட் கால கட்டத்தில் அரசாங்கம் தொழிற்சாலைகளை மூட உத்திரவிட்டது என்றால் சரிதான். 2020ன் போது வேலை செய்த 40 நபர்களும் வழக்கு தாக்கல் செய்யவில்லை. ஒரு சிலர் நிர்வாகத்தினிடமிருந்து செட்டில்மெண்ட் தொகை பெற்றுக்கொண்டார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காடடப்படும் ரசீதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இவை அனைத்தும் நான் நிர்வாகத்தில் வேலை செய்யாதபோது பெற்றுக்கொண்ட அட்வான்ஸ் தொகைக்கான ரசீதிகள் என்றால் சரிதான் **அது நி.த.சா.ஆ.3 வரிசைகள்.(18 எண்ணிக்கைகள்) மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது**

ஏற்கனவே நான் குறுக்கு விசாரணையின் போது கோவிட் காரணமாக தொழிற்சாலை மூன்று வருடங்களாக இயங்கவில்லை என்று கூறியிருந்தேன் என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலம் பக்கம் -2 பத்தி மூன்றில் கோவிட் காலகட்டத்திற்கு பின்பு எதிர்மனுதாரர் நிர்வாகம் குறிப்பிட்ட சில தொழிலாளர்களுக்கு மட்டும் வேலை வழங்கியுள்ளதாக கூறியுள்ளேன், அந்த குறிப்பிட்ட நபர்கள் யார் என்று என்னுடைய மனுவிலோ, நிருபண வாக்குமூலத்திலோ, தொழிலாளர் நல அலுவலர் முன்போ, நான் விவரங்கள் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். 2020ற்கு பின்பு நிறுவனம் செயல்பட்டதா என்று நான் சென்று பார்க்கவில்லை. நிர்வாகம் செயல்பட்டதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிர்வாகம் வாய்மொழி மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ என்னை பணிநீக்கம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தினக்கூலி அடிப்படையில்தான் வேலை செய்து வந்தேன் என்றும், லாக்டவுன் காலத்திற்கு பின்னிட்டு வேறு ஒரு நிறுவனத்தில் நல்ல பணியில் இருக்கிறேன் என்றால் சரியல்ல. 12(3) ஒப்பந்தத்தின் படி நான் எந்த தொழிற்சங்கத்திலும், உறுப்பினராக இல்லாததால் 12(3) ஒப்பந்தம் என்னை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்குடன் பிறர் தூண்டுதலின்பேரில்,பொய்யான நோக்கத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மனுவானது உண்மைக்கு புறம்பானது, தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் சன்பீம் பள்ளியில் செக்யூரிட்டியாக வேலை பார்த்தேன் என்றால் முன்புவேலை பார்த்தேன் தற்போது நின்று விட்டேன்.நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் தற்போதும் அங்குதான் வேலை பார்க்கிறேன் என்றால் சரியல்ல.01.01.2004 ல்தான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தேன் என்றும்நான் கூறுவது போல்01.07.1998 முதல் வேலை பார்க்கவில்லை என்றால் சரியல்ல மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

(Sd)Tmt.S.Uma Maheswari,
Additional Labour Court,Vellore.(FAC)
Vellore.